# ‘ஸ்டாலின் தொடரட்டும் தமிழ்நாடு வெல்லட்டும்’ என வாழ்த்தும் நெஞ்சங்கள்!



சென்னை, அண்ணா அறிவாலயத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளையொட்டி. முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஓ.பி.ரவீந்திரநாத் மற்றும் நிருவாகிகள் சந்தித்து, வாழ்த்து தெரிவித்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளையொட்டி, கழகத்தின் சார்பில் கேக் வெட்டி கொண்டாடப்பட்டது. இதில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, துணை அமைப்புச் செயலாளர்கள் ப.தாயகம் கவி, எஸ்.ஆஸ்டின், தலைமை நிலைய செயலாளர்கள் துறைமுகம் காஜா, பூச்சி முருகன், மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு , கழக மருத்துவ அணிச் செயலாளர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ., அறிவாலயம் மேலாளர் ஆர்.பத்மநாபன் ஆகியோர் உள்ளனர்.



சென்னை, அண்ணா அறிவாலயத்தில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளையொட்டி, சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் எஸ்.வி.சேகர் அவர்கள் சந்தித்து, வாழ்த்து தெரிவித்தார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளையொட்டி, முகாம் அலுவலகத்தில், அகில இந்திய ரயில்வே தொழிலாளர் சம்மேளனத்தின் (AIRF) தலைவரும், தெற்கு ரயில்வே மஸ்தூர் யூனியன் பொதுச் செயலாளருமான என்.கண்ணையா அவர்கள் சந்தித்து, வாழ்த்து தெரிவித்தார்.



சென்னை, அண்ணா அறிவாலயத்தில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளையொட்டி, தமிழ்நாடு அரசின் மாற்றுத்திறனாளிகளுக்கான ஆலோசனைக் குழுவின் உறுப்பினரும். டிசம்பர் 3 இயக்கத்தின் மாநிலத் தலைவருமான பேராசிரியர் தீபக் நாதன் மற்றும் நிருவாகிகள் சந்தித்து, வாழ்த்து தெரிவித்தனர்.



சென்னை, அண்ணா அறிவாலயத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளையொட்டி கழக மாற்றுத் திறனாளிகள் அணித் தலைவர் ரெ.தங்கம் தலைமையில் மாற்றுத் திறனாளிகள் சந்தித்து, வாழ்த்து தெரிவித்தனர்.



சென்னை, அண்ணா அறிவாலயத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளையொட்டி மகளிர் நீண்ட வரிசையில் நின்று , வாழ்த்து தெரிவித்தனர்.



சென்னை, அண்ணா அறிவாலயத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளையொட்டி கழகத்தினர் நீண்ட வரிசையில் காத்திருந்து தங்கள் அன்புத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு வாழ்த்து தெரிவித்த காட்சி!